ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2411/51 - 2024 නොවැම්බර් මස 22 වැනි සිකුරාදා - 2024.11.22

2411/51 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: WGSWD&EIP/ACQ/KB/32.
காணி அமைச்சின் இல.: 4-3/10/2016/LRB/29.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

(வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ், பெல்லந்தர ஹிக்கஹவத்த வீதியின் வடிகால் முறை மையை பெல்லன்வில வாவியுடன் இணைப்பதற்காக புதிதாக வாய்க்காலொன்றை அமைப்பதற்காக காணித் துண்டுகளை அரசுக்கு எடுத்துக் கொள்ளல்)

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பேவை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 535/A - பெல்லன்வில கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள நில அளவை யாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2024.10.16 ஆந் திகதிய கடத்திரல் வரைபட இல. 521216 (தொகுதி இல. 02, தாள் இல. 1) இல் காட்டப்பட்ட காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு :

01. **துண்டு இல. 1**
காணியின் பெயர் : தங்கஹ ஓவிட்ட; விபரம் : கால்வாயும் திறந்த நிலமும்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : தெரியாது; விஸ்தீரணம் : 0.0201 ஹெக்டயார்.

02. **துண்டு இல. 2**
காணியின் பெயர் : தங்கஹ ஓவிட்ட; விபரம் : வீட்டுத் தோட்டம்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : தெரியாது; விஸ்தீரணம் : 0.0035 ஹெக்டயார்.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

03. துண்டு இல. 3

காணியின் பெயர் : - ; விபரம் : வீதி; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : தெரியாது; விஸ்தீரணம் : 0.0042 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு இராஜகிரிய, வெலிக்கடை, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இல. 3 இல் அமைந்துள்ள, இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். திலக்கவர்தன,
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும்
சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம்,
பிரதேச செயலாளர் பிரிவு,
கெஸ்பேவை.

வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும்
சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின்
காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகம்,
இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்,
இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிக்கடை,
இராஜகிரிய,
2024, நவெம்பர் 20.

EOG 11 - 0139

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: WGSWD&EIP/ACQ/KB/06.
காணி அமைச்சின் இல.: 4-3/10/2012/LRB/22.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

(வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ் பெல்லன்வில பிரதேசத்தில் நீர் ஒதுக்குப் பிரதேச மொன்றை ஒதுக்கும் பொருட்டு கட்டுஎல வாய்க் காலுக்கும் போதிராஜ மாவத்தைக்கும் இடையில் அமைந்துள்ள காணித்துண்டுகளைஅரசுக்கு எடுத்துக் கொள்ளல்)

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பேவை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 533/F - பொரலஸ்கமுவ மேற்கு C இல. 535/B - திவுல்பிட்டிய மேற்கு மற்றும் இல. 535/A - பெல்லன்வில ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2024.10.16 ஆந் திகதிய கடத்திரல் வரைபட இல. 521219 (தொகுதி இல. 01, தாள் இல. 1) இல் காட்டப்பட்ட காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு :

01. துண்டு இல. 1

காணியின் பெயர் : தெரியாது; விபரம் : வாவி, உடற்பயிற்சி நடைபாதை, கால்வாய் மற்றும் வீதி (ஸ்ரீ மஹா போதிராஜாராம வீதி); உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : திருமதி கீதானீ அதாவுத பதிரண, இல. 36, பன்சலை வீதி, திவுல்பிட்டிய, பொரலஸ்கமுவை, திரு. ஆர்.ஏ.சீ. அபேசிங்ஹ, திரு. சீ.டீ. ஜயக்கொடி, திரு. எல்.எஸ். ஜயவர்தன, இல. 7, இரண்டாம் ஒழுங்கை, பெல்லந்தர வீதி, தெகிவளை, திருமதி டபிள்யு.எம். சமிலா தர்ஷனீ

விஜேசேன, இல. 10/8, விக்கிரமரத்ன மாவத்தை, கொகுவளை, நுகேகொடை, திரு. எஸ்.பீ.ஆர். டயஸ், இல. 128, திவுல்பிட்டிய, பொரலஸ்கமுவை, திரு. ரீ.கே. ஜகத் வீரசிங்ஹ, இல. 64B, விகார மாவத்தை, பெல்லன்வில, பொரலஸ்கமுவை, திரு. டபிள்யூ.எஸ். ரீ. சம்பத் நீல் பெரேரா, இல. 10/4, காலி வீதி, தெகிவளை, திரு. ஆர்.எம். கமகே, இல. 14/9/D, மகரகமை வீதி, மகுலுதூவ, திருமதி லிலங்கா ஹசினி பிரனாந்து பட்டவலகே, இல. 42/2, பள்ளிதொர வீதி, தெகிவளை; விஸ்தீரணம் : 7.5549 ஹெக்டயார்.

02. **துண்டு இல. 2**

காணியின் பெயர் : தெரியாது; விபரம் : உடற் பயிற்சி நடைபாதை, கால்வாய் மற்றும் வீதி (ஸ்ரீ மகா போதிராஜாராம வீதி); உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : திரு. ரீ.கே. ஜகத் வீரசிங்ஹ, இல. 64B, விகார மாவத்தை, பெல்லன்வில, பொரலஸ்கமுவை; விஸ்தீரணம் : 0.0475 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு இராஜகிரிய, வெலிக்கடை, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இல. 3 இல் அமைந்துள்ள, இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். திலக்கவர்தன,<br>
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,<br>
வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும்<br>
சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம்,<br>
பிரதேச செயலாளர் பிரிவு,<br>
கெஸ்பேவை.

வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும்<br>
சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின்<br>
காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகம்,<br>
இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்,<br>
இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,<br>
வெலிக்கடை,<br>
இராஜகிரிய,<br>
2024, நவெம்பர் 20.

EOG 11 - 0140